திரு. ஜெ. பாலகங்காதரன்: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்ன தகவலின் அடிப்படையில் நான் திருத்திக்கொள்கிறேன். இவ்வாறு இருக்கும்போது அங்கே நிரந்தர கோர்ட்டை ஏற்படுத்தி—அங்கே இப்போது இருக்கும் கோர்ட்டிலே ஏற்கனவே ஒரு வதந்தி நிலவுகின்றது. பேய்களும், ஆவிகளும் நிலவி வருகிறது என்று. அந்த வதந்தியினால் அங்கே இருக்கும் எந்த மேஜிஸ்ட்ரேடுகளும் ஒழுங்காக ரிடையர் ஆனது இல்லை. எல்லோருமே ரிடையர் ஆவதற்கு முதல் நாளே சஸ்பெண்டு செய்யப்பட்டு வீட்டிற்கு அனுப்பப்படுகிறார்கள். இந்த நிலைமையை மாற்றி உடனடியாக அமைச்சர் அவர்கள் அங்கே ஒரு நிரந்தர கோர்ட்டை ஏற்படுத்தி அங்கே கட்டிடமும் கட்டித் தருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது ஸ்பெஷல் கோர்ட்டாக இருப்பதன் காரணமாகத் தான் வாடகை கட்டிடத்திலே இருக்கிறது. அது பெர்மனென்ட் கோர்ட் ஆக விரைவிலே நிதிநிலைமைக்கு ஏற்ப அரசு நடவடிக்கை எடுக்கும். அப்போது உறுதியான சொந்தமான கட்டிடம் கட்டப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 261—திரு, ஆர், தங்கராஜ், மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்

261—

தென்னூர் அரசினர் மேல்நிலைப்பள்ளிக்கு பிற்பட்டோர் நல விடுதி அமைத்தல்,

*2924—திரு, ஆர், தங்கராஜ்:

மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருச்சி மாவட்டம் ஆண்டிமடம் ஒன்றியம் தென்னூர் அரசினர் மேல்நிலப் பள்ளிக்கு பிற்பட்டோர் நல விடுதி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்சமயம் இல்லை,

திரு, ஆர், தங்கராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தமிழ்நாட்டிலேயே ஆண்டிமடம் சட்டமன்றம் தொகுதி மிகவும் வறட்சியான தொகுதியாகும், அங்கு அரசு உதவி பெறுகின்ற தாம்போஸ் ஹையர் செகண்டரி ஸ்கூ

ஒன்று செயல்பட்டுக் கொண்டிருக்கிறது, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருக்கின்ற புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே இல்லை என்று சொல்லாமல் அந்த அரசு உதவி பெறும் மேல் நிலைப் பள்ளிக்கு ஒரு பிற்பட்டோர் நல விடுதியை அமைத்துத் தர ஆவன செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு, இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தென்னூருக்கு விருகில் 8 கிலோ மீட்டர் தொலைவில் ஆண்டிமடத்திலே பிற்படுத்தப்பட்டவர் நலத் துறையின் சார்பில் ஒரு விடுதி இயங்கிக் கொண்டிருக்கிறது, ஹரிஜன நலத்துறையின் சார்பிலே ஒரு விடுதி இயங்கிக்கொண்டிருக்கிறது, ஆகவே தற்போதைய சூழ்நிலையில் புதிய விடுதிகள் திறப்பதற்கு வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

முற்பகல் 9–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 262. திரு, அ, பாப்பா சுந்தரம். மாண்புமிகு கல்வி அமைச்சர்,

262—

மணப்பாறையில் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி,

*324 திரு, அ, பாப்பா சுந்தரம்:
மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மணப்பாறை நகராட்சியில் அரசு பெண்கள் மேல் நிலைப்பள்ளி துவங்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில். எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் செ, அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை,

திரு. அ. பாப்பா சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணப்பாறை என்பது ஒரு நகராட்சிப் பகுதியாகும் அது ஒரு தாலுக்காவினுடைய இருப்பிடம் ஆகும். ஆனால், மணப்பாறையைச் சுற்றி 40 கிலோ மீட்டர் தூரத்திற்கு எந்த பெண்கள் மேல்நிலைப் பள்ளியும் அமையப் பெறவில்லை. அந்த மணப்பாறையைச் சுற்றியிருக்கின்ற 8 ஊராட்சி ஒன்றியங்கள் மருங்காபுரி, வையம்பட்டி, கடவூர், தோகைமலை, மணப்பாறை போன்ற ஒன்றியங்களைசேர்ந்தச் அத்தனை பெண்கள் வெளியில்